Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 27 வெள்ளிக்கிழமை (11-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 220

# கடற்படையினரின் பாதுகாப்புடன் வட பகுதிக்கு சரக்குக் கப்பல் சேவை!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடக்கே ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு கடற்படையின் பாதுகாப்பை வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

அதே போன்று பயணிகள் கப்பல்களுக்கும் பாதுகாப்பு வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பயணிகள் கப்பலான ''மிசன்'' பேசாலை கடல் பகுதியில் வைத்து அழிக்கப்பட்டது—

சரக்குக் கப்பலான ''மொறங் பொங்'' வெற்றிலைக் கேணிக் கடற்பரப்பில் வைத்துக் கடத்தப்பட்டது—

ஆகிய சம்பவங்களினால் கடந்த ஒரு வார காலமாக வட பகுதிக்கான சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் சேவைகள் பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

''மிசன்'' கப்பல் தாக்கப்பட்ட சமயம் மன்னார் கடலில் நின்ற தராகி கப்பல் தற்பொழுது திருகோணமலையில் தரித்து நிற்கிறது காங்கேசன்துறை – திருகோண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பொருள்களின் விலை திடீரென அதிகரிப்பு!

### கடைகளில் மக்கள் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சீனி, மா, சவர்க்காரம் ஆகியவற்றை வாங்குவதில் மக்கள் நேற்று ஆர்வம் காட்டினர்.

எரிபொருள்களுக்கு – முக்கியமாக மண்எண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவியது. மக்கள்கானுடன் அலைவதைக் காணக் கூடியதாக இருந்தது. கடைகளில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த மண்எண்ணெய் போத்தல்கள் வெறுமையாகக் கிடந்தன. அத்தியாவசியப் பொருள்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நிர்க்கதி நிலையில் 3ஆயிரத்துக்குமேற்பட்ட அகதிகள்

### திருமலை அழைதது‌ச செல்ல ஏற்பாடு

திருகோணமலை, ஜூலை 11

யாழ்ப்பாணம் வருவதற்காக மன்னாரில் நிர்க்கதி நிலையில் உள்ள 3 ஆயிரம் அகதிகளை திருகோணமலைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை திருமலைக்கு அழைத்துச் சென்று தங்க வைப்பதற்கான வசதிகள் பற்றி ஆராய மன்னார் செயலக அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வாரம் திருகோணமலைக்கு வந்து ஆராய்ந்து திரும்பியுள்ளது.

அதே சமயம் திருமலையில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தில் 500 க்கு மேற்பட்ட அகதிகளும்—

திருமலையில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகளும் தங்கி இருப்பதாகவும்—

வவுனியாவில் இருந்து தினமும் 50 முதல் 75 வரையான மக்கள் திருமலைக்கு அழைத்து வரப்படுவதாகவும் – தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் தங்கி உள்ள அகதிகளும் அழைத்து வரப்படும் போது திருமலையில் இட நெருக்கடி ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

(இ-3-150)

## முச்சந்திமுரளி



தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற நிலை தான் பாருங்கோ......!

## கப்பல் பயணிகளை பொறுத்திருக்க சிவில் நிர்வாகம் அறிவுறுத்து

### உரிய நேரத்தில அறிவிக்கப்படுமாம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறை—திருகோணமலை பயணிகள் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கும் போது அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் —

அதுவரை சிவில் அலுவலகத்துக்கு வந்து சிரமப்படவேண்டாம் என்றும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

பயணத்தை மேற்கொள்வதற்கான பதிவுகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்றும் —

கப்பல் மற்றும் விமானப் பயணத்துக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பப்படிவங்களில் கேட்கப்பட்டுள்ள விவரங்களைத் தெளிவாக எழுதுமாறும் —

தமது பகுதி கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலகப்பிரிவு போன்ற விவரங்களையும் தவறாது குறிப்பிடும்படியும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தினர் பயணிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(இ-ஐ-3)

## வடகொரியகப்பலின் ராடர் புலிகளிடம்!

கொழும்பு, ஜூலை 11

கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட வட கொரியக்கப்பலான ''மொறங் பொங்'' கில் இருந்து அதி சக்திவாய்ந்த ராடர் சாதனங்கள், எரிபொருள்கள் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இக் கப்பல் 3 ஆயிரம் மெற்றிக்தொன் எடையுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## கூட்டணி எம். பிக்கள் நேற்று வெளிநடப்பு!

கொழும்பு, ஜூலை 11

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற போது சபைக்கு வந்த கூட்டணி எம். பிக்கள் சார்பில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசெப் பரராஜசிங்கம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அதன் பின்னர் சபையிலிருந்து அவர் வெளிநடப்புச் செய்தார்.

அவரைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்களான பொ. செல்வராஜா, கி. துரைராஜசிங்கம் ஆகியோரும் வெளிநடப்புச்செய்தனர்.

நேற்று மாலை மீண்டும் நாடாளுமன்றம் வந்த இந்த மூன்று உறுப்பினர்களும் அவசரகாலச் சட்ட நீடிப்புச் சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களித்தனர். நீலன் திருச்செல்வம் நேற்று சபைக்கு சமூகமளிக்கவில்லை.

அர்த்தமற்ற யுத்தத்தைக் கைவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கோரியே இந்த வெளிநடப்பு இடம்பெற்றது.

(இ-10-21)

## தப்பி ஓடிய படையினர் மீண்டும் வந்து இணைய 10நாள் அவகாசம்

### அதிகாரிகள் தரத்தில் உள்ளோர் மட்டும் 200 பேர்

கொழும்பு, ஜூலை 11

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் மீண்டும் இராணுவத்தில் வந்து இணைய வசதியாக பத்து நாள்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா செய்தியாளர்கள் மாநாட்டில் நேற்று அறிவித்தார்.

கனிஷ்ட அதிகாரிகள் 200 பேர் உட்பட சுமார் 12 ஆயிரம் படையினர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியுள்ளனர் எனத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர், தப்பி ஓடியவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணைந்தால் அவர்கள் முன்பு வகித்த அதே பதவிகளை வகிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் [illegible] இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சுமார் 20 ஆயிரம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் பகுதியிலிருந்து 7 இளைஞர்களின் சடலங்கள்

### யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகச் சம்பவத்தில் இறந்ததாக 7 இனந் தெரியாத இளைஞர்களின் சடலங்கள் சாவகச்சேரிப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 20 இலிருந்து 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணும் பொருட்டும் — பிரேதபரிசோதனையின் நிமித்தமும் — ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

(இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையால் சூழும் வேதனை!

சிறப்புக் கட்டுரை

நாளைய சஞ்சீவியில்

மு. சிவநேசன் வரையும்



போதைத் தீ!



எமது புதிய வெளியீடுகள்!

பிரபுதேவா, அப்பாஸ், ரம்பா நடித்த

வி. ஐ. பி.

சிவாஜி, விஜய் நடித்த

ஒன்ஸ் மோர்

ONCE MORE

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(48346)



இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ். மாவட்டக் கிளை

வடமாகாண ஆசிரியர் சங்கம்

நடாத்தும்

கல்விக் கருத்தரங்கு

காலம்:- 13 - 07 - 1997 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல்

இடம்:- கொக்குவில் இந்துக்கல்லூரி.

கருத்துரை வழங்குபவர்கள்.

கலாநிதி சபா. ஜெயராஜா

திரு. தா. அமிர்தலிங்கம்

மற்றும் பல விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

த. தேவராஜா
பொதுச் செயலாளர்

கொக்குவில் இந்து கல்லூரி,
கொக்குவில்.

(சி/ 1110)



சாவகச்சேரி கைத்தொழில்

வணிகர் மன்ற

வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்:- 12-07-97 சனிக்கிழமை பி.ப. 2 மணி

இடம்:- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்.

(சி-1111)


## கைதானோர் பாதுகாவலர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதியில் வசிக்கும் பெற்றோர், உறவினர் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-ஐ-3)

## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வண்ணார்பண்ணை (ஜே-82) நவாந்துறைவடக்கு (ஜே - 85) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் வண்ணார் பண்ணை கிராம அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

(ஐ)

★ ★ ★

உரும்பிராய், ஜூலை 11

நீர்வேலி வடக்கு(ஜே-269) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்டவர்களது விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவிருப்பதாக கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-154)

## கூட்டுறவு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஐ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

(ஐ-4)

## பதில் கடமை

தென்மராட்சி, ஜூலை 11

தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கொழும்புக்கு சென்றுள்ளதால் அவரது இடத்துக்கு யாழ். பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் பதில் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

சங்கானைப் பகுதியில்

## இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களின் கொட்டில்கள் சேதம்

வட்டுக்கோட்டை, ஜூலை 11

சங்கானைப் பகுதியில் தங்கியுள்ள வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பல கொட்டில்கள் பழுதடைந்து விழுந்துவிடும் நிலையில் உள்ளன.

மீளக்குடியமர்ந்த போது வலி. மேற்கு பிரதேசசெயலகம் மேற்குறித்த குடிசைகளை வேய்வதற்குத் தேவையான தென்னம் கிடுகுகளை வழங்கியிருந்தது. அதன் மூலம் மேற்படி கொட்டில்கள் வேயப்பட்டன.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மேற்படி கொட்டில்களின் கப்பு மரங்களும் கூரை மரங்களும் பழுதடைந்துள்ளன.

மழைகாலத்திற்கு முன்னதாக இந்தக் கொட்டில்கள் திருத்தப்பட்டால் மட்டுமே இம் முகாம்களில் மக்கள் தொடர்ந்து வசிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-12)

## மருதங்கேணி ஆஸ்பத்திரி கட்டடங்கள் திருத்தப்படவில்லை

### டாக்டர் தங்க விடுதி இல்லை

மருதங்கேணி ஆஸ்பத்திரி வைத்தியப் பொறுப்பதிகாரியின் விடுதி கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற விமானத் தாக்குதலின் போது முற்றாகச் சேதமடைந்துள்ளது.

ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி தற்பொழுது தனியார் வீடொன்றில் தங்கியுள்ளதால் இரவு வேளைகளில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படும் அவசர நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் உள்ளனர்.

ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருந்த விடுதி விமானத் தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்த வேளையில் ஆஸ்பத்திரிக் கட்டடமும் சேதமடைந்தது. கட்டடங்கள் இதுவரை திருத்தப்படாமல் உள்ளன.

(ஐ-117)

## வாரத்தில் இரு நாள்கள் பற்சிகிச்சை

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவு வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களில் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தினங்களில் மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் கி. மதியழகன் அங்கு சிகிச்சையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா சொக்கலிங்கம்

(நயினாதீவு - 3)

திருமதி சின்னம்மா சொக்கலிங்கம் 10 - 07 97 அன்று நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற திரு. சொக்கலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் பரராஜசிங்கம், நாகரெத்தினம், தனலட்சுமி, குணபாலலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி, காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் திருநாவுக்கரசு (J. P.), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 07 - 97 நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மதிசூடி

3 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(48341)

### திருமதி செல்லையா புவனேஸ்வரி

பலாலியைச் சேர்ந்தவரும், கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலை அருகில் வசித்தவருமாகிய திருமதி செல்லையா புவனேஸ்வரி காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-07-97) வெள்ளிக்கிழமை அவரின் தற்போதைய வதிவிடமான கரம்பொன் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்-
சி. செல்லையா
(கணவன்)

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

(48342)

### சுப்பிரமணியம் செல்வராணி

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு செட்டியார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராணி 8-7-97 இல் செட்டியார் மடத்தில் காலமானார்.

அன்னார் குமாரசாமி சுப்பிரமணியத்தின் (நில அளவையாளர் கங்காணி) அன்பு மனைவியும், சாந்தினி, சரோஜினி, புலேந்திரன் (கனடா), மகேந்திரன், பத்மினி, மாலினி, சுரேந்திரன் (பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விவேகானந்தன், சந்திரசேகரம், சண்முகசுந்தரம், புனிதவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-07-1997 இல் அராலி வடக்கு மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. சுப்பிரமணியம்
(கணவர்)

செட்டியார் மடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை

(48327)

## நினைவஞ்சலி

**37 ஆம் ஆண்டு**

அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்

(முன்னை நாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவவித்தியசாலை)

தோற்றம்: 22 - 07 - 1913
மறைவு: 02 - 07 - 1960

**7 ஆம் ஆண்டு**

திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை

(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

தோற்றம்: 23 - 08 - 1920
மறைவு: 01 - 07 - 1990

ஆண்டுகள் பல கடந்திட்டாலும் உங்கள் நிறை பணிகள் நீங்கிடுமோ மனங்களிலிருந்து...?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை.

(ஐ-1108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான

★ திறப்பு விழா ★

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருடம் ஆனித்திங்கள் 27 ஆம் நாள் இன்று (11 - 07 - 97) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையுள்ள சுபமூகூர்த்த நல்வேளையில்

**உலகேஸ்வரி கூல்பார்**

**(ஐஸ்கிரீம் வகைகள், சிற்றுண்டி வகைகள் அனைத்து குளிர்பானங்களினதும் விற்பனையாளர்)**

எனும் ஸ்தாபனத்தை

ஆரம்பித்து வைக்க இறைவன் அருள் பாலித்து இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வணிகப் பெருமக்கள் அனைவரும் வந்து ஆசி கூறி ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 309, அரசடி வீதி,
நல்லூர்.

(48332)


## கண்டனம்

நியூயோர்க், ஜூலை 11

கம்போடியாவில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருப்பது குறித்து அமெரிக்கா இரண்டாவது பிரதமர் ஹுன்சென் மீது குற்றம் சுமத்தி உள்ளது.

நொம் பெனுக்கான உதவிகளை நிறுத்திவிடப் போவதாகவும் அது கூறியுள்ளது.

இதேவேளை — நொம்பெனில் உள்ள அமெரிக்கத் தூதரக பணியாள்கள் உட்பட சுமார் 40 அமெரிக்கப் பிரஜைகளையும் அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா கேட்டுள்ளது. (ஐ)

## குஜ்ரால் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 11

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களில் எவர் மீதாவது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் அவர்கள் பதவி விலகி சட்ட பூர்வ விசாரணைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் குற்றம் புரிந்தவர்கள் அரசியல்வாதியானாலும் சரி அரச அதிகாரிகள் ஆனாலும் சரி அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது குஜ்ரால் இவ்வாறு கூறினார். (ஐ-5)

## ஆசியானில விவாதம்

நொம்பென், ஜூலை 11

ஆசியான் அமைப்பில் கம்போடியாவைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக விவாதிப்பதற்காக அதன் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று கோலாலம்பூரில் அவசர கூட்டம் ஒன்றை நடத்தினர்.

நொம்பெனில் இரண்டு போட்டிப் பிரதமர்களின் படைகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டையைத் தொடர்ந்தே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை - ஆசியானில் கம்போடியாவைச் சேர்ப்பதை நிறுத்தி வைக்கும்படி முதலாம்பிரதமர் இளவரசர் ரணறித் "ஆசியான்" அமைச்சர்களைக்கேட்டுள்ளார். இரண்டாம் பிரதமர் ஹுன் சென் தமது நாட்டுப் பிரச்சினையை உள்நாட்டுப்பிரச்சினையாகக் கருதுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ - 5)

## பொது அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம், அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த அனைத்து வருட மாணவர்களுக்கும் நடத்தும் பொது அறிவு — பொது உளச்சார்பு பொதுப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் யாழ், பல்கலைக்கழக பழைய நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களது அனுமதி அட்டைகளை எதிர்வரும்16ஆம் திகதிவரை மன்ற அலுவலகத்தில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)


# 10 ஆவது பிறந்ததின வாழ்த்து



## செல்வன் விஜயரத்தினம் பிரகாஷ்

புத்தூர் கிழக்கு வாதரவத்தையைச் சேர்ந்த **விஜயரத்தினம் குணேஸ்வரி** தம்பதிகளின் புதல்வன் பிரகாஷ் தனது 10 ஆவது பிறந்தநாளை இன்று டென்மார்க்கில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை டென்மார்க் அப்பா அம்மா,, தங்கைமார் சனுஜா, தீனுஜா வாதரவத்தையைச் சேர்ந்த ஐயா, அம்மம்மா, சின்னம்மா, டொனிச்சித்தி குடும்பம், மல்லிச்சித்தி, பெரியம்மா குடும்பம், கனடா கட்டு மாமா குடும்பம், உரும்பிராய் கொழும்பு மாமா குடும்பம், டென்மார்க் மாமி குடும்பம், நீர்வேலி பெரியப்பா குடும்பம், திக்கத்தைச் சேர்ந்த மாமிமார் குடும்பம், மச்சாள்மார் றம்யா, வேதிகா, தம்பி வினோஜன், சகோதரிமார் றேகா, கஜிதா மற்றும் உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல கேதுவுப் பிள்ளையார் துணை கொண்டு பல்லாண்டு காலம் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ச, கனகசிங்கம்
(ஐயா)

வாதரவத்தை,
புத்தூர்.

(48318)



# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அவதாரம்:
07
—
09
—
1926



அமரத்துவம்:
21
—
06
—
1996

## வேலுப்பிள்ளை நவரத்தினம்

(இளைப்பாறிய H. Q. I., கூட்டுறவுத் திணைக்களம்)

திதி: 11—07—1997

அந்திமத்தில் அருகிருக்க ஐவரில் நாம் ஒருவரில்லை
அருந்துணைவி அருகிருந்தும் ஐயனே நீர் எங்கு
சென்றீர்?

இல்லமதில் அன்பு வளர்த்து நீராண்ட பண்பு
இன்றும் என்றும் இருக்குமப்பா
இரவோடு பகலாய் தீராத துயருடன் ஓராண்டு
சென்று நாளையும்...

உலகிருக்கும் வரை எமக்கு உற்றதுயர் நீங்கிடுமோ?
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவரை
வேண்டுகிறோம்.

உங்கள் நீங்கா நினைவில்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்.

(48337)



D. சேனாதிராஜா
M. H. D. I.
பல் கட்டுமிடம்
கண் பரிசோதித்துக்
கண்ணாடி வழங்குமிடம்
தொடர்பு:
இல. 145, பிரதான வீதி,
(யாழ். மக்கள்வங்கி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(48334)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் சின்னத்தம்பி ஜெகநாதன்

(ஓய்வு பெற்ற சிறாப்பர்)

தோற்றம்:
1929 - 08 - 28

மறைவு:
1997 - 06 - 11

அன்பின் திருவுருவாய் ஆற்றலின் அமிசமாய்
இல்லறத்தின் ஜோதியாய் ஈகையின் இருப்பிடமாய்
ஈடில்லா வாழ்க்கைத் துணைவராய்
உறவினர்க்கு உற்ற துணையாய்
குடும்பத்தின் குல விளக்காய் வாழ்ந்தாயே!
தந்தையே ஜெகநாதன் அப்பா!
என்றும் உன் நீங்காத நினைவுகளுடன்
வாழ்கின்றோம் நாமே.

இன்று (11 - 07 - 97) அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் நாளை (12-7-97) சனிக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, மக்கள்.

A. G. A. காரியாலய ஒழுங்கை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(48333)



தெ. மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

**கிளை முகாமையாளர் பயிலுனர்**

# விண்ணப்பம் கோரல்

எமது சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கிளை முகாமையாளர் பயிலுனர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி **31 - 07 - 1997** ஆகும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்க. மேலதிக விபரங்களை தலைமைக் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

தென்மராட்சி கிழக்கு ப, நோ. கூ. சங்கம்,
கொடிகாமம், 11 - 07 - 1997.

([illegible])



பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. தபால் வழியில் பயிலலாம். கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) தகைமை கூடியவரும் பயிலமுடியும்.


பாலர்
ஆசிரியர் சங்கம்
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(48198)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரணவாய் அருள்மிகு மூத்த விநாயகர் ஆலய
# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புமலர்

11 – 07 – 1997



## வெள்ளோட்ட விழா நிகழ்வுகள்

மங்கள இசை
மஹோற்சவ காலக் கொடியேற்றவிழா -
முற்பகல் 10 மணி
சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா -
நண்பகல் 12. 15 மணி

தேர் சிற்பக் கலைஞர்
திரு. ஆறுமுகம் ஜீவரத்தினம்
அவர்களுக்கு

பொன்னாடைபோர்த்தி, தங்கப்பதக்கம் அணிவித்து,
தேர்ச்சுரபி என்னும் விருது வழங்கிக் கௌரவித்தல்
சிறப்புச் சொற்பொழிவுகள்
அருண் மலர் வெளியீடு

மெய்யடியார்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

- தேர் திருப்பணிச்சபை



## மூத்த விநாயக முதல்வா போற்றி

கோடி சூரியர் போல்
குலவிய மேனி
சித்திரத் தேரில் திகழும்
நன்னாள்
உருகவே நெஞ்சம்
பெருகவே கண்ணீர்
பக்தர் இடர்களைக்
களைவாய் போற்றி
மூத்த விநாயக முதல்வா
போற்றி, போற்றி
வருவாய் வருவாய்
தேர் மீதினிலே!

## அருள் பெருகி வாழி! வாழி

பொன்னழகும் கலையழகும் பொருந்தி, இன்பம்
பொங்கு புகழ் கரணவாய் பதியில் மேவும்
முன்னவனாய் அடியவர்க்கு கருணைநல்கும்
மூத்தவிநாய கப்பெருமான் வீற்றிருக்கும்
தன்னிகரில் தங்கரதம் பிரபைவீசத்
தவச்சிவ ரத்தினாச் சாரிஎன்னும்
உன்னும்கலைத் தேர்ச்சுரபி ஆக்கித்தந்தார்;
ஓங்கார ஒலிஅகில உலகுமோங்க,

இத்திறன் சேர் தேரின்வெள் ளோட்டம் தன்னால்
இயமுகனின் பொற்கோ புரத்துக் கோயில்
சித்திரமா மலைநிகர்க்க வாழி, தொண்டுத்
திருச்சபையார் அடியார்கள் பூசை செய்வோர்
சித்தமுயர் துணைபுரிந்தோர், தேரமைத்த
சீவரத் தினமென்னும் சிற்பக் கொண்டல்
அத்திமுகன் கழலருளால் சுகசெல்வங்கள்
அனைத்தும் பெற்றருள் பெருகி வாழி! வாழி.

அருட்கவி. சீ. விநாசித்தம்பி



சித்திரத் தேரை வடித்த சிற்பாசிரியர்
ஆறுமுகம் ஜீவரத்தினம்

## அருள் உணர்வு தரும் தேர்

தென்னிந்திய சிற்பக் கலைஞர்களால் 61 ஆண்டுகளின் முன் அமைக்கப்பெற்ற சித்திரத் தேரானது எம்பெருமான் மூத்த விநாயகரின் திருவருட் குறிப்பினால், கருணையம்பதி வாழ் மெய்யடியார்களின் பெரு நிதியுதவி கொண்டு அருள் உணர்வு ஊட்டும் பூரண சித்திரத் தேராக சிற்பக் கலைஞர் திரு. ஆ. ஜீவரத்தினம் அவர்களால் அமைக்கப் பெற்றுள்ளது. ஆனி உத்தரத் திருநாளாகிய இன்று (11-7-97) திருத்தேரின் வெள்ளோட்ட விழாவைக் காணத் திருவருள் பாலித்துள்ளது.

விளம்பர இல. [சி/1067]

# அராலி தெற்கு நீர் விநியோகம் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பம்

வட்டுக்கோட்டை, ஜூலை11 அராலி தெற்குப் பகுதிக் கான குடி தண்ணீர் விநி யோகம் மீண்டும் ஆரம்பிக் கப்படவுள்ளது. வலிகாமம் மக்களின் இடம் பெயர்வைத் தொடர்ந்து செயலற்றுப் போயிருந்த மேற்படி குடி தண்ணீர் விநியோகத்திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் செயற்படுத் தப்படும்.

நீர் விநியோகத்தை ஆரம் பிக்க வசதியாக நீர்த்தொட் டிக்கு நீரைப் பாய்ச்சும் ஜென ரேற்றர் தற்போது பொருத் தப்பட்டு வருகிறது.

1996 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து வலி. மேற்கு பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா நிதியில் தேசிய நீர் வழங்கல், வடிகால் அமைப்பு சபையால் இந்த ஜெனரேற்றர் கொள்வனவு செய்யப் பட்டது.

குடி தண்ணீர் விநியோகம் ஆரம்பமானதும் அதனால் பயன் பெறும் ஒவ்வொரு குடும்பத்திடம் இருந்தும் மாதாந்தம் 10 ரூபா அற [illegible] தெரிவிக்கிறது.

(ஐ-12)

## பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

வெள்ளிவிழாக் கண்ட
ஆங்கில ஆசிரியப் பெருந்தகை
செல்வி சாவித்திரி விநாசித்தம்பி

நாவலர்யாழ். பள்ளியிலே நற்பணிகள் பலசெய்து
நல்லா சிரியை எனநற்பெயர் தனையெடுத்து
பதினேழு ஆண்டுகள் பாங்குடனிப் பள்ளியிலே
பகுதித் தலைவியாய் பண்புடன் கடமை செய்து
ஆங்கிலக் கல்வியினை ஆர்வமுடன் கற்பித்த
ஆளுமை மிக்கவினா சித்தம்பி சாவித்ரி
ஓய்வுநீ பெற்றாலும் ஓயாது உன்சேவை
இன்றிங் கெனக்கூறி நாமொரே மனதாக
உங்களைப் பாராட்டி இனியும் மங்களமாய்
உங்கள்வாழ் வமையட்டும் என வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(48331)

## சங்கீத பாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 11 யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கோட்டங்களில் ஆண்டு 6 முதல் 11 வரை சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான கருத்தரங்கு இன்றும், நாளையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற விருப்பதாக வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (ஐ)

## யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின்

அனுசரணையுடன்
யாழ். பல்கலைக்கழக
ஹொக்கி அணி
யாழ். மாவட்ட கழகங்களிடையே நடத்தும்
ஆண்களுக்கான
7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப்போட்டி
விண்ணப்ப முடிவுத்திகதி: 17 - 07 - 1997

★ பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தங்களது அணி வீரர்கள் தொடர்பான பெயர் விவரங்கள் உள்ளடங்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முடிவுத் திகதிக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறையில் சமர்ப்பிக்கவும்.

★ பங்குபற்ற விரும்பும் அணிகளிற்கான போட்டி நிலைத் தெரிவுகள் 18/07/97 மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறையில் இடம்பெறும்.

விளையாட்டு அவை,
யாழ். பல்கலைக்கழகம்.

(48336)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி

# அருள்மிகு பத்திரகாளிகாம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## ஞான ஒளி ஊட்டும் வீரபத்திரப் பெருமான்

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி திருக்கோயிலின் கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெறுவது மன மகிழ்வைத் தருகிறது. கும்பாபிஷேகம் என்பது ஓர் ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு தரம் நடைபெறும் அபிஷேகம் ஆகும்.

எங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற இறைவனை ஒருமுகப்படுத்தி ஆலயத்தில் மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி வழிபடுவது சைவசமய மரபு ஆகும். எல்லாம் வல்ல இறைவன் பல வடிவங்களை எடுத்து ஆன்மாக்களை இரட்சிக்கின்றான். அவ் வகையில் வீரபத்திர மூர்த்தமாக எழுந்தருளும் இறைவன் ஆன்மாக்களுடைய ஆணவ மலங்களை நீக்கி ஞான ஒளியை ஊட்டுகின்றான். உடுப்பிட்டியில் எழுந்தருளி இருக்கும் இறைவன் சந்திரசேகர வீரபத்திரராக எழுந்தருளியுள்ளார். சிவபெருமானுடைய உருவமாகவே இக் கோயிலில் மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி மகா கும்பாபிஷேகம் என்னும் பெரும் சாந்தி விழா நடைபெறுகிறது. இந் நிகழ்ச்சியை சிறப்பிக்கும் முகமாக மலர் ஒன்றை வெளியிடுவது பாராட்டுதலுக்குரியது.

கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரிய பெருமக்கள், ஆலய அறங்காவலர்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவருக்கும் இறைவனுடைய நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
**குருமஹாசந்நிதானம்**
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## கர்மாரம்பத்தின் போது கருணை மழை பொழிந்தது

உடுப்பிட்டி அருள்மிகு பத்திரகாளி சமேத சந்திரசேகர வீரபத்திரர் புனராவர்த்தன கும்பாபிஷேகம் இனிது நிறைவு பெறக் குருவருளும் திருவருளும் கூடி கர்மாரம்பத்தின் அன்றே கருணை மழை பொழிந்தது. வீரபத்திரர் அருள் எல்லா மக்களுக்கும் கிடைக்கப் பெற்றது; கைமேல் பலன் கிடைத்தது போல் நாம் அனைவரும் உளம் மகிழ்ந்தோம். இவை எல்லாவற்றுக்கும் நாளும் அவன் திருமேனி தீண்டும் அந்தணப் பெருந்தகை கனகசபாபதிக் குருவின் பக்தியும் அன்பும் தான் காரணம். சிற்பக் கலைகள் அமைந்த சுந்தர விமானம் அழகாக அமைப்பதற்கு எல்லா வகையாலும் உதவி புரிந்த அடியார்கள், தர்மகர்த்தா சபையினர் அறம், பொருள், இன்பம், வீடு முதலான பதினாறு பேறும் பெற்று நாட்டில் உள்ள இன்னல்களும் இடர்களும் நீங்கி சகலரும் சுபீட்சமான வாழ்வு வாழ எல்லாம் வல்ல வீரபத்திரரின் பாதக் கமலங்களை வணங்கிப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சுபம்!

பிரதிஷ்டா பிரதமகுரு, கிரியாகலாபமணி,
சிவாகம கிரியா தத்துவநிதி
**சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக் குருக்கள்**
(கலிவியங்காடு — நல்லூர்,

## அமைதி தருவது இறைவழிபாடே

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் அமைந்துள்ள, அருள்மிகு சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயிலின் கும்பாபிஷேக விழா எதிர்வரும் ஆனி உத்தரத்தன்று நடைபெற விருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய கஷ்டமான சூழ்நிலையில் மக்களுக்கு மன அமைதியும், ஆறுதலும் மிகவும் தேவையாக உள்ளன. இறைபக்தி ஒன்றே இத்தகைய அமைதியையும், ஆறுதலையும் தரவல்லது, எனவே இறைவழிபாடு இக்கால கட்டத்தில் மிகவும் அவசியமாக அமைகிறது.

இக்கும்பாபிஷேக விழா சிறப்பாக அமைந்து அருள்மிகு சந்திரசேகர வீரபத்திர சுவாமிகளின் அருள் மக்கள் அனைவருக்கும் நல்லாசிகளைவழங்கப்பிரார்த்திக்கின்றோம். இவ்விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

'இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க!'

இறைபணியில்
**சுவாமி ஆத்மகனாநந்தா**
**தலைவர்.**

இராமகிருஷ்ண மிஷன்
வெள்ளவத்தை,
கொழும்பு.

## அறுநூறு வருட வரலாறுடைய அருள் துலங்கும் வீரபத்திரர்

தென்னிந்தியாவில் உள்ள காஞ்சிபுரத்தில் காஞ்சிமா என்ற புனித நகரம் ஒன்று உண்டு அந்த நகரத்தை சேது காவலர் சேனாதிராஜா ஆண்டு வந்தார். பிற்காலத்தில் அவர் அரசநிலையிட்ட சந்திரசேகர மாப்பாண முதலியார் என்று அழைக்கப்பட்டார். இவர் தீராத நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டிருந்த காலை தென்திசையிலுள்ள யாழ்ப்பாணத்தில் கீரிமலை என்ற புனித தலத்தில் நீராடும்படி அருள் வாக்கு கிடைத்தது அதை நிறைவேற்றும் பொருட்டு குடும்ப சமேதராய் தன் குல குருவாகிய கோபாலகிருஷ்ணக்குருக்கள் மற்றும் பதினெண் வரிசையினருடன் 1365 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆம் நாள் நாகபட்டின துறைமுகத்தில் நாவாய் ஏறி, யாழ்ப்பாணத்தில் வீரமாகாளி அம்மன் துறையில் வந்திறங்கி தென்கீழ் திசையை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார்,


### குளத்தின் மகிமை

வரும் வழியில் ஒரு குளத்தையும் நன்கு செழித்து வளர்ந்த மாமரம் ஒன்றையும் கண்டனர். களைப்புற்றதன் காரணமாக அவர்கள் அவ்விடத்தில் தங்கினார்கள். சந்திரசேகரன் அக்குளத்தில் நீராடிய பொழுது தனது நோயில் சிறிது மாற்றத்தை உணர்ந்தான். எனவே தொடர்ந்தும் அவ்விடத்தில் தனது பரிவாரங்களுடன் தங்கியிருந்து அக்குளத்தில் தினமும் ஸ்நானம் செய்து வருகையில் அவனின் நோய் நீங்குவதன் அற்புதத்தை உணர்ந்தான், நாளடைவில் அவரின் நோய் பூரணகுணமாகியது. தனது நோய்குணமடைவதற்கு இந்த ஸ்தலத்தின் மகிமையே காரணம் என உணர்ந்த சந்திரசேகரன் தனது குலதெய்வமாகிய வீரபத்திர சுவாமிக்கு ஒரு கோயிலை ஸ்தாபித்ததுடன் அக்குளத்தையும் புனருத்தாரணம் செய்து அதற்கு சந்திர குளம் எனவும் பெயரிட்டான்.

இதன் பின் சிறிது காலம் இவ்விடத்தில் தங்கி தனது சிரேஷ்ட புத்திரன் தனபால சிங்கத்தையும் கோபால கிருஷ்ண குருக்களையும் அத்துடன் பதினெண் சீர்வரிசையினரையும் இவ்விடத்தே விட்டுவிட்டு தனது பாரியார் சகிதம் தாயகம் சென்றார். இத் தலமும் அதனைச் சூழவுள்ள நிலபுலன்களும் சீர்பெற்றன. மக்களும் மிச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர்.

இவரின் பரம்பரையில் தோன்றிய வீரகத்தியார் கதிர்காமர் 1851 ஆம் ஆண்டு இக் கோயிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக் காலந் தொடக்கம் எந்த வித இடையூறும் இன்றி இக் கோயிலின் மஹோற்சவம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

பின்னர் அவரின் சந்ததியினரால் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. இவ்வாலயத்தின் மகிமை பற்றியும் இச் சூழலிலுள்ள மக்களுக்கு வெவ்வேறு காலங்களில் அருளாட்சி செய்து



ஆலயத்தின் புதிய தூபி

பற்றியும்பல கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. ஒரு முறை இக் கிராமத்திலும் அயற் கிராமங்களில் கொள்ளைநோய் பரவிய பொழுது இக் கிராம மக்கள் அதையுற்று கவலையுற்றிருந்த காலை; ஓர் அடியார் அருள்வடிவில் தோன்றிய எம்பெருமான், அவருடன் அவரின் ஆட்டுப்பட்டிகளை இக்கிராம எல்லைக்கு அப்பால் துரத்தி விட்டார் என்றும்பின்பு இக்கொள்ளை நொய் இக் கிராமத்தை நெருங்கவே இல்லை என்றும் ஒரு வரலாறு உண்டு.

தற்கால சமூக சீர்திருத்த சூழ் நிலைகளுக்கேற்ப தனிப்பட்ட நிர்வாகத்திலிருந்த இந்த ஆலயம் அவர்களின் பூரண விருப்பத்துடன் ஒரு

( 6ஆம் பக்கம் பார்க்க)

அ. சி. குமாரசுவாமி
தலைவர்,
தர்மகர்த்தா சபை.

## விடிவை நோக்கிய பாதை

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் கும்பாபிஷேகம் செய்யப்படுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். நம் நாட்டிலுள்ள சிறியனவும் பெரியனவுமாகிய ஆலயங்கள் பல இன்று ஆர்வத்தோடு புனரமைப்புச் செய்யப்படுகின்றன. இது எம்மினத்தின் விடிவைநோக்கிய முதற்கட்டமாகும். ஆலய வழிபாடும், தெய்வநம்பிக்கையும், அறச்செயலில் ஈடுபாடும் மன்னுயிர் ஓம்புதலும் எமது விடிவை நோக்கிய பாதைகளாகும்.

உடுப்பிட்டியிலே எழுந்தருளி அருள் பாலிக்கும் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினர் மேற்கொண்ட அருள் முயற்சியின் காரணமாக இவ்வாலயத் திருப்பணி நிறைவேறியுள்ளது

சைவ மக்களாகிய எமது வாழ்வில் திருக்கோயில்களே முதன்மை வாய்ந்தனவாக அமைவதால் இவற்றை அவ்வப்போது காலந் தவறாமல் பேணிப்பாதுகாத்து உய்வடைவோமாக.

உடுப்பிட்டி சந்திரசேகரர் வீரபத்திரர் ஆலயக் குடமுழுக்கினை மேற்கொண்ட அருளாளர்கள் அனைவருக்கும் எமதுவாழ்த்தையும்வணக்கத்தையும் கூறி அமைகின்றேன்

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

சயன்ஸ் அக்கடமி
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கண்டி ஸ்ரோர்ஸ்
அச்சுவேலி.

மதுஷன் பல்பொருள் வாணிபம்
மார்க்கற் வீதி,
உடுப்பிட்டி.

ஜெகா மோட்டோர்ஸ்
நெல்லியடி.

விளம்பர இல (சி-1102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தரமான புதிய மிருதங்கம், தபேலா, டோல்கீ என்பன விற்பனைக்குண்டு. பழைய வாத்தியங்கள் சிறந்த முறையில் சீர் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [48197]

பருத்தித்துறை, தும்பளை. மணியகாரன் சந்திக்கு அருகே 4 பரப்புடன் கல் வீடு வளவு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி யோகாம்பிகை வரதராசா, தும்பளை, பருத்தித்துறை. [சி/1101]

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி. (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

---

பிரத்தியேக வகுப்புக்கள்

நாடகமும் அரங்கியலும்

**A/L 99**

ஆரம்பம்: 12 - 07 - 97
சனி 3 மணி

பா. அகிலன்

278, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(48329)

---

**ACCOUNTING**

திரு. பாலவாசன்

**A/L 98**

ஒற்றைப் பதிவு

ஆரம்பம்: 14-07-97
3 - 4 P.m.

**SHAMROCK**

(48328)

---

சன்மார்க்க சபை

குரும்பசிட்டி

## திருவாசக விழா

இடம்:- 'முதாகர பவனம்' இணுவில் கிழக்கு
(அம்மா அச்சக அருகாமையில்)

காலம்:- 13-07-97 ஞாயிறு காலை 9-30 மணி
(புதிய நேரம்)

தலைவர்;- திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள்
(அதிபர், இராமநாதன் கல்லூரி)

சிறப்புரைகள்:-

I 'திருவாசகம் காட்டும் பக்திநெறி'
பேராசிரியர் கலாநிதி ப. கோபால கிருஸ்ணஐயர்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யழ்ா பல்கலைக்கழகம்)

II "திருவாசகத்தில் சைவ சித்தாந்த சிந்தனைகள்"
திரு மா. வேதநாதன் M. A.
(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

III தொகுப்புரை
பேராசிரியர், கலாநிதி நா. சுப்பிரமணியன்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பொ. பாலகுமார்
பொதுச்செயலாளர்

(48323)

---

சங்கானை - வெல்வில் இலுப்பைத்தாழ்

## முருகமூர்த்தி தேவஸ்தான புனரமைப்புக் குழு

மேற்படி இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி ஆலயம் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் முற்றாக சேதமடைந்துள்ளது. இதனை அரசாங்கத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. முற்றாகச் சேதமடைந்த ஆலயத்தைப் புனரமைக்க பெருந் தொகையான நிதி தேவைப்படுகிறது. எம்பெருமானின் ஆலயத்தைக் கட்டியமைப்பதற்கு முருகனடியார்கள் அனைவரையும் அன்புடன் தங்கள் அன்பளிப்புகளை மனமுவந்து செய்யுமாறும், செலுத்தும் அன்பளிப்புக்குப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளும்படியும் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தொடர்பு கொள்ளப்பட வேண்டியவர்கள்:-

1. சிவஸ்ரீ சி. நித்தியானந்தக்குருக்கள்
2. கா. சந்திரராசா - பிரதேச செயலாளர்
3. ந. சர்வானந்தன் - கிராம சேவையாளர்

முக்கிய குறிப்பு:-

இக்குழுவினரைத் தவிர்ந்த வேறு எவரிடமும் அன்பளிப்புகள் செலுத்த வேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

12 - 07 - 97 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு எம்பெருமான் ஆலய புனரமைப்பு வேலை ஆரம்பிக்க திருவருள் கூடியுள்ளது. இவ்வைபவத்தில் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

- புனரமைப்புக் குழு

(48338)

---

யாழ்ப்பாணக்கல்லூரி தமிழ் மன்றம் நடத்தும்

## இளங்கோவடிகள் விழா



நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திற்கு நேர்த்தி மிகும் பெருவிழாவில்

★ பட்டி மண்டபம் ★ வில்லுப்பாட்டு
★ சொற்பொழிவுகள்

இடம்:- ஒட்லி மண்டபம், வட்டுக்கோட்டை.
14 - 07 - 97 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு ஆரம்பம்.
அனைவரும் வருக,

செயலாளர்,
தமிழ் மன்றம் – யாழ்ப்பாணம் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(சி/1104)

---

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர கோயில்
மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
தொடர்ச்சி

## 150 வருட காலமாக மஹோற்சவம் கண்ட ஆலயம்

சந்திரசேகர மாப்பாண முதலியாரால் ஸ்தாபிக்கப்பட்ட உடுப்பிட்டி சந்திர சேகர வீர பத்திர சுவாமி கோயில் அறுநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது ஆகும். சுமார் நூற்றைம்பது வருடங்களாக மஹோற்சவத்தைக் கண்ட பெருமைக்குரிய இவ்வாலயத்தின் பாலஸ்தாபனம் கடைசியாக 13 – 07 – 1989 இல் நடைபெற்றது.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகவிழா இன்று (11 - 07 - 1997) வெள்ளிக்கிழமையன்று நடைபெறுவற்கு எம்பெருமான் அருள்பாலித்துள்ளார். இவ்விழா எம்பெருமானின் அருளால் சிறப்படைந்திடவும், அடியார்கள் பெருமளவில் எம்பெருமானைத் தரிசித்து அவன் கருணை வெள்ளத்தில் மூழ்கிடவும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

செ. ஸ்ரீநிவாசன்
பிரதேச செயலர், கரவெட்டி.

## அடியார் நல்வாழ்வுக்கு வீரபத்திரன் திருவருள்

விண்ணை முட்டும் வியத்தகு விமானங்கள் நிறைந்த உடுப்பிட்டி பத்திரகாளிகாம்பிகா சமேத சந்திரசேகர வீர பத்திரப் பெருமான் அதிசயம் நிரம்பிய திருவருள் மிக்கவர். அவர் திருவிளையாடலை அவரேயறிவார்; யாமறியோம். தன்னுடைய ஆலயத் திருப்பணிகளை பக்தர்கள் விரும்பியவாறு நிறைவேற்றித் தந்த அவரது பெருமை அதிசயிக்கத்தக்கது.

பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா காணும் அடியார்கள் சீருஞ் சிறப்புமாக சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழ அப்பெருமான் திருவருள் புரிவாராக.

சிவஸ்ரீ சுவாமி கனகசபாபதிக் குருக்கள்
ஆலய நித்திய சிவாச்சாரியார்.

## அறமும் மறமும் நல்கும் வீரபத்திர அருள் மூர்த்தம்

உயிர்கட்குக் கருணை புரியும் நோக்கமாகச் சிவன் எடுத்த 25 வடிவங்களையும் யோகம், போகம், வேகம் என்னும் மூவகையில் அடக்கலாம். வீரபத்திர வடிவம் வேக மூர்த்தத்துள் அடங்கும்; கோரவடிவானது. தக்கனுக்கு நல்லருள் செய்து வழிப்படுத்தியது.

உடுப்பிட்டியில் கோயில் கொண்டருளிய சந்திரசேகர வீரபத்திர சுவாமி அறம், மறம் நல்கும் அருள் மூர்த்தம். புனருத்தாரணம் செய்யப்பெற்றுப் புதுப் பொலிவுடன் விளங்கும் ஆலயத்தில் காளிகாம்பிகா சமேதராக வீற்றிருந்தருள் புரியும் வண்ணம் மஹா கும்பாபிஷேகம் ஆனி உத்தரத்தன்று நடைபெற அவனருள் பாலித்துள்ளது. கும்பாபிஷேகத் தரிசனம் கோடி புண்ணியம்.

சிவசிஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள்
கரணவாய். கரவெட்டி.

## அறுபது வருட

பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தா சபை அமைக்கப்பட்டு அச்சபையால் இவ்வாலயம் செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகிறது 13 - 07 - 1989 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ் நிலைகளால் குறிப்பிட்ட காலத்தில் கும்பாபிஷேகம் செய்யமுடியாமல் போய்விட்டது.

தற்பொழுது கட்டடப் பொருள்களும் ஏனைய தளபாடங்களும் ஓரளவு பெறக் கூடியதாக இருந்ததனாலும், அடியார்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்ததாலும் இவ்வாலயம் சிறப்புற கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### தனித் தனிக் கோயில்கள்

ஏற்கனவே பத்திரகாளி சமேத வீரபத்திரருக்கு பரிவார மூர்த்திகளாக விநாயகருக்கும், முருகனுக்கும் இருந்த ஆலயங்களுடன் பத்திரகாளிக்கு தனி ஒரு கோயிலும், அத்துடன் பரிவார மூர்த்திகளாக மகாலக்ஷ்மி, நடேசர், தட்சணாமூர்த்தி, வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோருடன் 150 ஆண்டுகளாக அருளாட்சி அருளிய பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமிக்கு தனியே ஒரு கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்களும் குருவாசம், களஞ்சிய அறை, வாகன சாலை, யாகசாலை, வசந்தமண்டபம் ஆகியனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன, இவற்றுடன் தீர்த்தக் கேணியும் கலையரங்கத்துடன் கூடிய கல்யாண மண்டபத்துடன் இணைந்த அன்னதான மடமும் கட்டப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டு மஹோற்சவத்தின் போது சித்திரத் தேரில் வீரபத்திர சுவாமி பவனி வருவதற்கு ஏதுவாக சித்திரத் தேரும் துரிதமாக அமைக்கப்பட்டு வருவதுடன் அதற்கான தேர் முட்டியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

07-07-1997 இல் கும்பாபிஷேக கர்மாரம்பம் தொடங்கப்பட்டுதொடர்ந்து கிரியைகள்நடந்து11-7-1997 இல் — ஆனி உத்தரத்தன்று — புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இத் தெய்வீக கைங்கரியத்தை நிறைவேற்ற சகல வழிகளிலும் ஆதரவு அளித்த அனைவருக்கும்சஞ்சலமுற்றிருக்கும்இந்த நாட்டுக்கும், மக்களுக்கும், மற்றும் அனைவருக்கும் எல்லாம் வல்ல உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி அருள் பாலிப்பாராக.

இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை;

ஓம் சாந்தி!

## விடைத்தாள் மதிப்பிடும் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஜி. சி. ஈ உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிக்கு ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கான விவரங்களை பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளதாகவும் — இப்பணியில் ஈடுபட அனுபவமும், தகுதியும் உள்ளவர்கள் தங்களது விவரங்களை வலயக் கல்விப் பணிமனைகளில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூன்றாம் தரப்பு

இலங்கையில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் இவ்வாரத்தில் இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். இங்குள்ள பல அதிகாரிகளையும் பிரமுகர்களையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற அமைப்புக்கள் மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார். அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். யாழ்ப்பாணத்து நிலைவரங்களையும் மக்களின் வாழ்க்கை நிலைகளையும்— கேட்டறிந்தார்.

தூதுவர் டேவிட் றிற்றி யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தர நாயகத்தையும் சந்தித்தார். அப்போது யாழ்ப்பாண மக்களின் மன நிலையை அறிந்து கொள்வதில் ஆஸ்திரேலியத் தூதுவர் ஆர்வம் காட்டியிருக்கிறார்.

யாழ்ப்பாண மக்களின் வெளிதோற்றத்தையும் அவர் தனது மன உள்நிலையையும் ஆயர் அனேகமாகச் சரியாகவே சொல்லியுள்ளார். அது மட்டுமின்றி இத்தகைய ஒரு நிலை மாறுவதற்கு, ஒழிவதற்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; அதற்கு வெளிநாட்டு அரசுகளும் உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்,

இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு மூன்றாம் நாடு ஒன்றின் உதவி, மத்தியஸ்தம் தேவை என்பதனை ஆயர் வலியுறுத்தியதோடு—

இலங்கை அரசு மீது அத்தகைய அழுத்தம் ஒன்றை ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் கொடுக்கவேண்டும் என்ற கருத்தையும்—டேவிட் றிற்றியிடம் எடுத்துரைத்தார்.

மூன்றாவது தரப்பாகச் செயற்படுவதற்கு ஆஸ்திரேலியா உட்படப் பல நாடுகள் விருப்பம் தெரிவித்த போதிலும், இருதரப்புகளும் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை என்று ஆஸ்திரேலியத் தூதுவர் பதிலளித்திருக்கிறார்.

அவர் சொல்வது சரியே. இரண்டு தரப்புகளும் கேட்கும் பட்சத்தில் மூன்றாம் தரப்பாகச் செயற்படுவதற்கு பல மேற்கு நாடுகள் விருப்பம் தெரிவித்திருந்தன. ஆனால் அதற்குச் சாதகமாக எதுவும் நடைபெறவில்லை.

மேலை நாடுகள் தமது விருப்பத்தை மட்டும் தெரிவிக்காமல் அதனைச் செயற்படுத்த இரண்டு தரப்புகளுடனும் தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுத்ததாக இல்லை.

சிங்கள அரசியல் தரப்பும் தமிழ் அரசியல் தரப்பும் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது சாத்தியமா என்ற சந்தேக நிலை தோன்றியிருப்பதை சமாதானத்தில் ஆர்வமுள்ள வெளிநாடுகள் உணர்வது நல்லது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சிங்கள, தமிழ்த் தரப்புகள் ஒத்த கருத்து நிலைக்கு வரமுடியாமல் துருவப்பட்டு நிற்பது ஒன்றே இதற்கு நல்ல உதாரணம்.

சுயலாபம் கருதாத மூன்றாம் தரப்பு ஒன்று உதவினால் மட்டுமே நியாயமான தீர்வு சாத்தியமாகும். இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம்.

# வடக்கு-கிழக்கு இணைப்புக்கு முகம்மது முற்றாக எதிர்ப்பு

## நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

வடக்கு—கிழக்கு மாகாண சபைகள் நிரந்தரமாக ஒன்றிணைக்கப்படுவதை தாம் முற்றாக எதிர்ப்பதாக ஐ.தே.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம்.எச். முகம்மது நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் முகம்மது உரை நிகழ்த்தினார்.

அதிகாரப் பரவலாக்கல் என்ற போர்வையில் தனித் தனி இன ரீதியான அலகுகளை ஏற்படுத்துவதற்கு தாம் பலத்த எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

ஒருங்கிணைப்பு முயற்சிகளையோ, பிரிவினை முயற்சிகளையோ மேற்கொள்வதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்திவிட முடியாது என்றும் கூறினார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை பிரேரணையை சமர்ப்பித்துப் பேசுகையில் சில இடங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கில் அவசர காலச் சட்டம் முழுமையாக அமுல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (இ-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கூட்டுறவுச் சங்கங்களின் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளருக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும். (இ-4)

# பெண்பனை தறித்தால் ரூ. 50,000 அபராதம்

கொழும்பு, ஜூலை. 11

பலா மரங்களையும், ஈரப்பலா மரங்களையும், பெண் பனைகளையும் தறிப்பதை முற்றாகத் தடைசெய்யவேண்டுமென விவசாய அமைச்சர் டி. எம். ஜெயரட்ண சமர்ப்பித்த யோசனை ஒன்றை அமைச்சரவை அங்கீகரித்திருக்கின்றது.

இந்தத் தடையை மீறுவோருக்கு ஆகக் கூடுதல் தண்டனையாக 50 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## புக்காரா குண்டு வீச்சு அனர்த்தம்:

# சென். பீற்றேர்ஸ் ஆலயத்தில் நினைவு தினம் அனுஷ்டிப்பு

நவாலியில் 1995 ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற புக்காரா விமானத் தாக்குதலில் மரணமடைந்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மறை மாவட்ட முதல்வர் அருட் திரு. செல்வராசா அடிகள் தலைமையில் நவாலி பங்குத் தந்தை எரிக் றொசாவின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் இறந்தவர்களின் உற்றார் உறவினர்களும் நூற்றுக்கணக்கான இந்து — கிறிஸ்தவ மக்களும் கலந்து கொண்டனர்.

இறந்தவர்களின் உருவப் படங்களுக்கு மலர் மாலை அணிந்து அவர்கள் அஞ்சலி செலுத்தினர். (இ-100)

# புறா பிடிக்கச் சென்ற சிறுவர்கள் எங்கே?

## பெற்றோர்கள் தேடுகின்றனர்

சாவகச்சேரி, ஜூலை 11

புறா பிடிப்பதற்காகச் சரசாலை வடக்குப் பகுதிக்குச் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த இவர்கள் கடந்த திங்களன்று பிற்பகல் சரசாலை வடக்குப் பகுதியிலுள்ள லுணுவில் பிள்ளையார் ஆலயச் சூழலில் புறாபிடிக்கச் சென்றுள்ளனர்.

அங்குள்ள மருதமரம் ஒன்றில் இவர்கள் இருவரும் புறா பிடிப்பதற்காக ஏறியதை சிலர் நேரில் கண்டுள்ளனர்.

ஆனால் அன்று மாலை அவர்கள் வீடு திரும்பாததை அடுத்து அவர்களைத் தேடிய பெற்றோர்கள் பின்னர் இராணுவத்தினரிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவனான ஆ. யசோதரன் (வயது 13), சி. விஜய குமார் (வயது 16) ஆகிய இருவருமே காணாமற் போயுள்ளனர். [ஐ-31)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூலை 11

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் இன்று வெள்ளிக்கிழமை ஆனி உத்தரத்தை ஒட்டி விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆனி உத்தரத்தை முன்னிட்டு ஆருத்திரா தரிசனமும், பஞ்சமுக அர்ச்சனை ஆகியனவும் இடம் பெறும்.

கொழும்புத்துறை மணலியம்பதி அம்மன், ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர்விநாயகர், நல்லூர் சிவன். கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள். பருத்தித்துறை சிவன். புலோலி பர்வத வர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆகிய ஆலயங்களிலும் ஆனி உத்தரத்தை ஒட்டிய விசேட உற்சவங்கள் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலின் மூல மூர்த்திகளான சிவலிங்கப் பெருமான் நல்லைநாயகி அம்பாள் ஆகிய மூர்த்திகளின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி அருள் மிகு சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோயில் தீர்த்தத் திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

அளவையம்பதி அருள் மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாரந்த நிகழ்வுகளில் — இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் "அளவிலாத பெருமையார்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ-4)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 11

மீசாலை கிழக்கு நெல்லியடி முருகன் ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளி காலை முதல் நடைபெறும். (இ-117)

★ ★ ★

பருத்தித்துறை புலோலி கிழக்கு குருமணல் அருள் மிகு ஸ்ரீ கந்தசாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

## தேர் வெள்ளோட்டம்

கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணியளவில் டைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுடன் நடைபெறவுள்ள இந்த விழாவில் தேர் சிற்பக் கலைஞர் ஆ. ஜீவரத்தினம் ஸ்தபதி கௌரவிக்கப்படுவார்.

"தேரின் மகத்துவம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. கோபாலகிருஷ்ணன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

"சித்தாந்த நோக்கில் இரதோற்சவம்" என்ற தலைப்பில் பண்டிதர் க. முத்துவேலு சிறப்புரையாற்றுவார்.

விழாவில் அருண் மலர் வெளியீடும் இடம் பெறும். (ஐ-4)

# ஆண்டவனின் ஆனந்தக் கூத்து ஆனி உத்தரத்தின் அருட்காட்சி

சிவபெருமானுக்குரிய விசேட விரதங்களில் சிறந்ததாகக் கருதப்படும் ஆனி உத்தர நன்னாள் இன்றாகும் சிவ விரதங்களில் இது மிகவும் மகிமை வாய்ந்தது. இந்தியாவிலே சிதம்பரத்தில் இந்த ஆனி உத்தரம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பெருங்கருணை வள்ளலாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு தனு கரண புவன போகங்களைப் படைத்தருளுகின்றான். ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருக்கோலம் ஐந்தொழில்களையும் உணர்த்துவதாகும்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காண்பதற்கு மனிதப் பிறவி வேண்டும். அந்த அழகிய காட்சி இந்த ஆனி உத்தரத்தில் சிதம்பரத்திலே காணலாம்.

அதிகாலையிலேயே அடியார் கூட்டம் சிதம்பரத்திலே நிரம்பி வழியும் நடராஜப் பெருமானுக்கு தேன், பால், தயிர், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் நிகழும் அதன் பின்னர் நடராஜப் பெருமான் புறப்பாடாகி ஆனந்தத் தாண்டவம் ஆடுவார் இந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

உலகம் யாவற்றுக்கும் தானே கருத்தா என்பதை உணர்த்தும் வகையில் "தோற்றந் துடியதனில் தோயும் திதியமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம், ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு" என்ற பாடல் மூலம் மனவாசங்கடந்த தேவனார் அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

நடராஜப் பெருமானின் ஆனந்தக் கூத்தை "பஞ்ச கிருத்திய திருநடனம்" என்றே கூறுவர்.

இந்த ஆனி உத்தர நாளில் விரதமிருந்து, ஸ்ரீ நடராஜப் பெருமானை மத்திலே தியானித்து, "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் தமை அமுது செய்வித்தல்" என்பதற்கிணங்க சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்தல் வேண்டும். இது ஒரு புண்ணிய நன்னாளாகும். குழந்தைப் பேறு இல்லாதவர்கள் இந்த ஆனி உத்தர விரதம் அனுட்டித்தால் அனுகூலமாகும் என்பது ஆன்றோர் கருத்து.

சைவ மக்களாகிய ஒவ்வொருவரும் இந்த ஆனி உத்தர நன்னாளில் விரதமிருந்து சதுர்விவதபல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வார்களாக.

— இராசையா ஸ்ரீதரன்

## ஞானக்கதிர்

# நாளை

**ஆனி 28**

**சனிக்கிழமை**

திதி: ஸப்தமி

முற்பகல் 11.47 வரை.

நட்சத்திரம்: அத்தம்

மாலை 6.34 வரை.

சுபநேரம்: 2.59-4.29

ராகுகாலம்: 8.59-10.29

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைவழிப்பாதையை திறக்கும் முயற்சியின் நோக்கம் என்ன?

## யுத்தத்தை தொடரவே என்கிறார் கூட்டணி எம்.பி.

கொழும்பு, ஜூலை 11
வடக்குக்கான தரைவழிப் பாதையை அரசாங்கம் திறப்பதற்கு முயற்சிப்பதற்கான நோக்கம் வடக்குக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பவே என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆயுத தளபாடங்களை அனுப்பவும் யுத்தத்தை தொடர்ந்து நடத்தவுமே பிரதான பாதை திறக்கப்படுவதாக தற்போது சந்தேகிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் பேசியதாவது:-

இன்னும் ஏழு மாதங்களில் சுதந்திர தினப் பொன் விழாவை அரசு கொண்டாடவுள்ளது.

கடந்த 50 வருட ஆட்சியில் 25 வருடங்கள் இந்த நாடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆளப்பட்டுவருகிறது. இது துரதிர்ஷ்டவசமானது.

சுதந்திரம் கிடைத்து இன்றுடன் 18 ஆயிரத்து 106 நாள்கள் ஆகின்றன. இதில் 8 ஆயிரத்து 760 நாள்கள் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியில் அவசரகால சட்டத்தின் கீழ் ஆளப்பட்டு வருகின்றன இது ஓர் உலக சாதனை ஆகும்.

இந்தச் சபையில் 200 தடவைகள் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதங்கள் நடைபெற்றுள்ளன. இக்காலகட்டத்தில் அப்பாவிப் பொதுமக்கள், படைவீரர்கள் மற்றும் யுத்தத்தில் ஈடுபட்டோர் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டும், ஊனமுற்றும் காயமடைந்தும் உள்ளனர்,

இராணுவ ஆட்சி நிலவிய பாகிஸ்தானில் கூட அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதிக நாள்கள் ஆட்சி நடைபெறவில்லை.

இந்நிலையில்தான் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அர்த்தமுள்ள அரசியல் தீர்வைக் காண முன்வர வேண்டும் என அரசைக் கேட்டுக் கொள்கிறேன்,

யாழ்ப்பாணத்துக்குத் தரைப் பாதையைத் திறக்கும் நோக்குடன் அண்மையில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதை திறப்பதற்கு இராணுவ நடவடிக்கை பொருத்தமான ஒன்று அல்ல. பொருத்தமான வழிகளை அரசு பின்பற்றாது அரசு திட்டமிட்டு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இது கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

தரைவழிப் பாதையைத் திறப்பது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கலாம் பூநகரிப் பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் முன்னர் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.

அரசு இதய சுத்தியுடன் யாழ்ப்பாணத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்காக தரைவழிப் பாதையைத் திறக்க முன்வந்திருந்தால் விடுதலைப் புலிகள் நிச்சயமாக அதை எதிர்த்திருக்கமாட்டார்கள்

ஆனால் திட்டமிட்ட இந்த இராணுவ நடவடிக்கையானது யாழ்ப்பாணத்துக்கு உணவு மற்றும் மருந்துவகைகளை அனுப்புவதற்காக மேற்கொள்ளப்படவில்லை. யுத்தத்தைத் தொடர்வதற்காக யுத்த தளபாடங்களை எடுத்துச் செல்லவே இந்தப் பாதை திறக்கப்படுகிறது என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

75 கிலோ மீற்றர் நீளமான இந்தத் தரைவழிப் பாதை திறக்கப்பட்டாலும் அதைப் பாதுகாக்க முடியாது. விடுதலைப் புலிகளின் கடந்த கால வரலாற்றைப் படித்துப் பார்த்தால் இதை அரசால் புரிந்துகொள்ள முடியும்.

எத்தனை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுப் பலப்படுத்தப்பட்டாலும் திறக்கப்படும் பாதையைப் பாதுகாக்க முடியாது என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

## வெனிசுவேலாவில் பெரும் பூகம்பம்!

### 30 பேர் பலி! 70 பேர் காயம்

கரகாஸ் ஜூலை 11
தென்னமெரிக்க நாடான வெனிசுவேலாவின் கிழக்குக் கரையோரப் பகுதியில் ஏற்பட்ட கடும் நில நடுக்கத்தினால் குறைந்தது 30 பேர் பலியாகிவிட்டனர், சுமார் 70 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் கரகாஸுக்கு 340 கிலோ மீற்றர் கிழக்கே உள்ள ஒரு நகரில் பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 17 பேர் பலியாகினர்: கட்டட இடிபாடுகளில் இருந்து 30 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

மற்றொரு நகரான மொலாவில் அலுவலகக் கட்டடம் ஒன்று இடிந்ததில் மேலும் ஐவர் உயிரிழந்தனர். 27 பேர்வரை காயமடைந்தனர்.

ரிச்டர் அளவு கோலில் இந்த நில நடுக்கம் ஐந்தரைப் புள்ளியாகப் பதிவாகியது.

நள்ளிரவு வேளை வெனிசுவேலா மக்களை உலுப்பிவிட்ட இந்த பூகம்பம் கடந்த 30 ஆண்டுகளில் அங்கு ஏற்பட்ட மிக மோசமான பூமியதிர்ச்சி என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### கம்போடிய நெருக்கடிக்கு

## மத்தியஸ்தம் செய்ய ஐ. நா. செயலர் விருப்பம்

நியூயோர்க், ஜூலை 11
கம்போடியாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையைத் தீர்த்து வைப்பதில் மத்தியஸ்தம் வகிக்க ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வுகாணும் முயற்சியாக கம்போடியாவின் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் ரணரித்தை சந்தித்துப் பேசவும் தாம் தயாராக இருப்பதாக ஐ. நா. செயலர் கூறியுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டுப் போரை அனுபவித்து வந்துள்ள கம்போடிய மக்கள் மீண்டும் ஒருமுறை அரசியல் ஸ்திரமற்ற கட்டத்தில் பிரவேசிப்பது குறித்து அவர் தமது கவலையைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## இராணுவ ஹெலி மீது கொலம்பியாவில் சூடு!

### 25 படையினர் பலி!

பொகோடா, ஜூலை 10
கொலம்பியாவின் இடதுசாரித் தீவிரவாதிகள் நாட்டின் கிழக்குப் பகுதியில் இராணுவ ஹெலிக்கொப்ரர் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதில் அதிலிருந்து 25 படையினரும், நான்கு பொதுமக்களும் பலியாகினர்.

கொலம்பியாவின் சிவில் விமானப் போக்குவரத்துக் கம்பனி ஒன்று ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தி வந்த ரஷ்ய தயாரிப்பான 'எம். ஐ.- 17' ரக ஹெலியே சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதேவேளை —

கொலம்பியாவின் மிகப்பெரும் எண்ணெய் விநியோகக் குழாய் கட்டமைப்பின் ஒரு பகுதியை தேசிய விடுதலை இராணுவத் தீவிரவாதிகள் கடந்த ஞாயிறன்று வெடிவைத்து தகர்த்தனர். (ஐ)


'சுப்பஸோ'வின்
புதிய வெளியீடு!
மீண்டும் நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
சரோஜாதேவியுடன் விஜய்
சிம்ரான் நடித்த
ஒன்ஸ் மோர்
(ONCE MORE)
என்றும் தரமான CD பிரதிகளுக்கு
சுப்பஸோ வீடியோ
(சி/1112) யாழ்ப்பாணம்.


### தப்பி ஓடிய...

(முதலாம் பக்கத் தொடர்)

பேர் மீண்டும் இராணுவத்தில் இணைந்தனர் எனவும் அவர கூறினார்.

அதேசமயம் 12 வருடகட்டாய சேவையை முடித்த 57 வயதுக்கு உட்பட்ட இளைப்பாறிய படையினர் தற்போது மீண்டும் இராணுவத்தில் சேர்க்கப்படுகிறார்கள் என்றும்—

கடந்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மூலம் இதுவரை 16 கிலோ மீற்றர் நெடுஞ்சாலை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் —

ஒவ்வொரு கிலோ மீற்றர் தூரத்தைக் கைப்பற்ற மேலும் படையினர் தேவை எனவும் ஏ. எப். பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. (இ-10-4)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கூடுதல் விலைக்கு விற்கப்பட்டன. பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது.

பொருள்கள் பதுக்கப்பட்டுவிட்டதாகப் பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

நேற்று சில எரிபொருள் நிலையங்களில் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டபோதிலும், நேரம் செல்லச் செல்ல அதன் விநியோக அளவு குறைக்கப்பட்டுப் பின்பு விநியோகம் நிறுத்தப்பட்டது.

அதே சமயம் குடா நாட்டில் தேவையான அளவு மண் எண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும்—

மக்கள் முண்டியடித்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்றும்—பெற்றோலியம் கூட்டுஸ்தாபன யாழ். அலுவலகம் மக்களைக் கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் மக்கள் மண்எண்ணெய்யைக் கொள்வனவு செய்வதற்காக அலைந்து திரிவதையடுத்து பெற்றோலியம் கூட்டுத்தாபன யாழ். அலுவலக அதிகாரிகள் சகல பகுதிகளுக்கும் சென்று மக்கள் தமக்கு தேவையான மண்எண்ணெய்யைக் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.

மண்எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்ட உடனடியாக வாய்ப்பு இல்லை என்றும்—

மக்கள் தேவையற்ற வகையில் கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்றும்— கோரப்பட்டுள்ளது. (இ-3-4-15-51-117)

### 40 மேலதிக வாக்குகள்

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று 40 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

இதற்கு ஆதரவாக 117 உறுப்பினர்களும் எதிர்த்து 77 உறுப்பினர்களும் வாக்களித்தார்கள்.

ஐ.தே.க:, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆகியவை அவசர கால நீடிப்பை எதிர்த்து வாக்களித்தன.

புளொட் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஏனைய கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தன. (இ-4)

### விளையாட்டுப் போட்டி

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் தடகள விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மயிலணி வடக்கில் நடைபெறும். (இ-4)

### கருத்தரங்கு

ஆசிரியர் வகுப்பு- 1 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் சகல ஆசிரியர்களுக்கும் உதவும் நோக்கில் பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பு ஏற்பாடு செய்துள்ள வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-4)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் கன்னியர் மடம் மத்திய மகாவித்தியாலயத்திலும்—

சாவகச்சேரி கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும்—

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

### கடற்...

(முதலாம் பக்கத் தொடர்)

மலை பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த 'சஜிந்த' கப்பல் வாடகைக் காலம் முடிவடைந்ததால் கொழும்பு திரும்பி விட்டது.

எனினும் இந்த இரண்டு கப்பல்களின் கப்டன்களும் தொடர்ந்து சேவையை நடத்த கடற்படையின் பாதுகாப்புக் கோரி இருந்தனர்.

அதே போன்று வட கொரிய சரக்குக் கப்பலான 'மொறங் பொங்' கடத்தப்பட்டதை அடுத்து வட பகுதிக்கான சரக்குக் கப்பல் சேவையின் பாதுகாப்பும் கேள்விக் குறியாக இருந்து வந்தது.

சரக்குக் கப்பல்களுக்கு கடற்படைப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவித்த பிரிகேடியர் சரத் முனசிங்க —

பொருள்களை ஏற்றிய நிலையில் வடபகுதி செல்ல சரக்குக் கப்பல் ஒன்று திருகோணமலைத் துறைமுகத்தில் தயாராக நிற்பதாகக் கூறினார்.

மேற்கொள்ளப் படவுள்ள பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றிய விவரங்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடமுடியாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-4-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org